ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2143/48 - 2019 ඔක්තෝබර් මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.03
*2143/48 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

இறப்பெய்தியமை காரணமாக கம்புறுபிட்டிய பிரதேச சபையின் தவிசாளர் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ், தவிசாளர் பதவி வகித்த வீரசூரிய முதியன்சேலாகே சஞ்ஜீவ பிரியனாத் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும் கம்புறுபிட்டிய பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான தவிசாளர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வீரசிங்ஹ கங்கானம்கே ஆனந்த வீரசிங்ஹ என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;


*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இப்போது, கம்புறுபிட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான தானன்திரி விதானகே போசிதா கௌமதீ ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு வீரசிங்ஹ கங்கானம்கே ஆனந்த வீரசிங்ஹ என்பவர் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டீ. டபிள்யூ. போசிதா கௌமதீ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கம்புறுபிட்டிய பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தறை,
2019, ஒற்றோபர் 02.

10-635/1

---

**2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர், தவிசாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணமாக கம்புறுபிட்டிய பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ், துணைத் தவிசாளர் பதவி வகித்த வீரசிங்ஹ கங்கானம்கே ஆனந்த வீரசிங்ஹ என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் துணைத் தவிசாளர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும் கம்புறுபிட்டிய பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான துணைத் தவிசாளர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு லலித் அல்விஸ் சமரசிங்ஹ என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது, கம்புறுபிட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான தானன்திரி விதானகே போசிதா கௌமதீ ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு லலித் அல்விஸ் சமரசிங்ஹ என்பவர் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டீ. டபிள்யூ. போசிதா கௌமதீ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கம்புறுபிட்டிய பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தறை,
2019, ஒற்றோபர் 02.

10-635/2

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*கம்புறுபிட்டிய பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ், கம்புறுபிட்டிய பிரதேச சபையின் இலக்க 01, கதார வட்டாரத்திற்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட வீரசூரிய முதியன்சேலாகே சஞ்ஜீவ பிரியனாத் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கம்புறுபிட்டிய பிரதேச சபையின் இலக்கம் 01, கதார வட்டாரத்திற்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட் டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ரெஜீ நாமெல் வெல்லப்பிலி என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது, கம்புறுபிட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான தானன்திரி விதானகே போசிதா கௌமதீ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ரெஜீ நாமெல் வெல்லப்பிலி என்பவர் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் இலக்கம் 01 கதார வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*டீ. டபிள்யு. போசிதா கௌமதீ,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*கம்புறுபிட்டிய பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*மாத்தறை,*
*2019, ஒற்றோபர் 02.*

*10-635/3*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*